## சுதந்திரத் தமிழ்நாடு!

"திராவிடர் கழகம், மக்களுக்கு சமுதாயத் துறையில் உள்ள இழிவு நீங்க வேண்டும்; பொருளாதாரத் துறையில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகள் மறைய வேண்டும்; எல்லோரும் நம்மினத்தோடு சேர்ந்து வாழ சாதி ஒழிய வேண்டும்; இவை எல்லாம் அடைந்து நாம் மனிதத் தன்மையோடு வாழ தனித் தமிழ்நாடு சுதந்திரமாக அடைய வேண்டும் எனப் பாடுபடுகிறது. இதற்காகத் தலைவர் பெரியார் அவர்கள் தள்ளாத வயதிலும் பாடுபட்டு வருகின்றார்கள்.

இந்த இலட்சியங்கள் எல்லாம் நிறைவேற நாம் எல்லோரும் பெரியார் அவர்கள் தலைமையில் ஒன்றுபட்டு அவர்கள் அறிவுரைப்படி நடப்போமாக!"

*விழுப்புரம் வட்டம் சிறுவந்தாடு கிராமத்தில் உள்ள*
*மோட்சக்குள வீதியில் திராவிடர் கழகக் கொடி ஏற்றி,*
*அன்னை மணியம்மையார் அவர்கள் ஆற்றிய உரை*

*- **"விடுதலை"** (5-5-1959)*